

சுதேசி செய்திகள்
வேளாளர் செய்தி களம் ! வளர்க வேளாளர் ஒற்றுமை!!
வ.உ.சி
கப்பலோட்டிய தமிழன்



விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஆங்கிலேயர்களை அச்சம் கொள்ள வைத்தவர்களில் வள்ளிநாயகம் உலகநாதன் சிதம்பரம் பிள்ளையும் ஒருவர். பிரிட்டிஷ் கப்பல்களுக்குப் போட்டியாக முதன் முதலாக உள்நாட்டு இந்தியக் கப்பல் நிறுவனத்தை தொடங்கி ஆங்கிலேயருக்கு எதிராக கப்பலோட்டிய தமிழன். தூத்துக்குடிக்கும், இலங்கைக்கும் இடையே கடல்வழி போக்குவரத்தை சுதேசி நீராவிக் கப்பல் வாயிலாக துவக்கியவர். தொழிலாளர்கள் சங்கம் இல்லாதபோதும், அடிமையாக பணிபுரிந்த நூற்பாலை தொழிலாளர்களுக்கு உரிமையை வாங்கித் தந்தவர். ஏழைகளுக்காக வாதாடியதற்காக வழங்கறிஞர் உரிமத்தை இழந்தவர். இப்படிப்பட்ட வ.உ.சிதம்பரம்பிள்ளை மீது பிரிட்டிஷ் அரசு, தேசத்துரோகியாகக் குற்றம் சுமத்தப்பட்டு ஆயுள்தண்டனை விதித்து சிறையில் அடைத்தது. அப்பழுக்கற்ற அக்கரம் சிவந்து ரத்தம் ஒழுகியபோதும், சுதந்திரந்திற்காக செக்கிழுத்தது. கடல் மீது இந்தியக் கொடியை பறக்க விட்ட கப்பலோட்டிய தமிழன் கட்டுரையை எழுவதில் பெருமை கொள்கின்றேன். கரை காண முடியா புகழுடைய வ.உ.சி.பற்றி கரையளவு கூறுகின்றேன்.

# வ.உ.சி

# கப்பலோட்டிய தமிழன்



## சுதேசி  செய்திகள்

1872ஆம் ஆண்டு செப்டம் 5 ஆம் நாள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் சைவ வெள்ளாளர் மரபில் வெள்ளையன் கொள்ளை அடிக்க முடியாத அற்புத முத்தான வ.உ.சி, உலகநாதபிள்ளை, பரமாயி அம்மாள் தம்பதிக்கு மூத்த மகனாகப் பிறந்தார். தந்தை உலகநாதன் பிள்ளை நாட்டின் மிக முக்கியமான வழக்கறிஞர்களுள் ஒருவர்.

### வழக்கறிஞர்:

தனது 14 வயதில் ஒட்டப்பிடாரத்திலிருந்து தூத்துக்குடிக்குச் சென்று புனித சேவியர் பள்ளியிலும், கால்டுவெல் பள்ளியிலும் கல்வி பயின்றார். திருநெல்வேலியில் இந்துக் கல்லூரியிலும் சேர்ந்து கல்வி கற்றார். அதன்பின், திருச்சியில் சட்டக் கல்வி பயின்றார். காவல்துறையினரால் தவறாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் வ.உ.சி. யினால் விடுதலையானதால் காவல் துறையினரின் கோபத்திற்கு ஆளானார். இச்சூழ்நிலையை விரும்பாத அவரது தந்தை வ.உ.சி.யை 1900ஆம் ஆண்டு தூத்துக்குடிக்குச் சென்று பணியாற்றும்படி அனுப்பி வைத்தார். வ.உ.சி. தூத்துக்குடியிலும் புகழ் பெற்ற வழக்கறிஞரானார்.

### பாரதியாருடன் நட்பு:

வ.உ.சி. யும், பாரதியாரும் அருகருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், இருவரின் தந்தையரும் நெருங்கிய நண்பர்கள் என்றபோதும், பாரதியை வ.உ.சி பார்த்தது கிடையாது. பாரதியாரை சந்தித்து உரையாடும் ஒரு வாய்ப்பு வ.உ.சிக்கு கிடைத்தது. இந்த சந்திப்புக்குப் பின்னர் பாரதியாரும், வ.உ.சியும் நெருங்கிய நண்பர்களாயினர்.



### தமிழறிஞர் வ.உ.சி:

வ.உ.சி. இயற்றிய நான்கு நூல்களுமே கவிதைகளால் ஆனவைதான். அவை மெய்யறம், மெய்யறிவு, பாடல் திரட்டு, சுயசரிதை ஆகிய நூல்களும், 1917ல் வ.உ.சி. ரத்தினக் கவிராயர் எழுதிய இன்னிலை என்ற நூலுக்கு விளக்க உரையும், சிவஞான போதம் எனும் பக்தி நூலுக்கு மிகச் சிறந்த விளக்க உரையும் எழுதியுள்ளார். இதுதவிர வ.உ.சி. யால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள் திருக்குறள் (மணக்குடவர் உரையுடன்) 1917 ஆம் ஆண்டிலும், தொல்காப்பியம் (இளம்பூரனார் உரையுடன்) 1928ஆம் ஆண்டிலும் வெளியிடப்பட்டது. மேலும், வ.உ.சி. விவேகபானு, இந்து நேசன், தி நேஷனல் போன்ற பத்திரக்கைகளுக்கு ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

### கப்பல் வாங்கிய வ.உ.சி:

"பிரிட்டிஷ் இந்திய ஸ்டீம் நேவிகேஷன் கம்பெனி", இந்தியா, இலங்கை இடையே கப்பல்களை இயக்கிக் கொண்டு இருந்தது. அது ஆங்கிலேயர்களின் வணிகத்துக்கே முக்கியத்துவம் கொடுத்தது. ஆதலால் வ.உ.சி. இந்தியர்களுக்காக ஒரு கப்பல் நிறுவனம் துவங்க தீர்மானித்தார்.

1906ஆம் ஆண்டு அக்டோபர் 16ஆம் நாள் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைப் வ.உ.சி. பதிவு செய்தார். (அதன் தலைவர் மதுரை தமிழ்ச்சங்கத் தலைவர்,

வள்ளல் பாண்டித்துரை தேவர், சட்ட ஆலோசகர் சேலம் சி.விஜயராகவாச்சாரியார்). இந்நிறுவனத்தின் மூலதனம் ரூ.10,00,000. ரூ.25 மதிப்புள்ள 40,000 பங்குகள் கொண்டது. ஆசியர்கள் அனைவரும் இதில் பங்குதாரர்கள் ஆகலாம். 4 வக்கீல்களும் 13 வங்கியரும் இருந்தனர்.

கப்பல் நிறுவனத்தைப் பதிவு செய்தவுடன் புதிய பங்குதாரர்களைச் சேர்க்கும் முயற்சியில் வ.உ.சி. இறங்கினார். ஆனால் நிறுவனத்திற்குச் சொந்தமாகக் கப்பல் இல்லை. இந்நிலையில் "ஷாலேன் ஸ்டீமர்ஸ் கம்பெனி"யிடமிருந்து கப்பல்களை வாடகைக்கு எடுக்க வேண்டியதாக இருந்தது. "பிரிட்டிஷ் அரசின் கெடுபிடியால் வாடகைக்குக் கொடுக்கும் ஒப்பந்தத்தை ரத்து செய்தது. இதற்கு பதிலடியாக உடனடியாக கொழும்பு சென்று ஒரு கப்பல் வாடகைக்கு எடுத்து வந்து கப்பல் போக்குவரத்து தொடர்ந்து நடக்கும்படி செய்தார்.

ஆனால் சொந்த கப்பல்கள் இல்லாமல் கப்பல் நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த இயலாது என்பதை அறிந்து கொண்ட வ.உ.சிக்கு, தூத்துக்குடி வணிகர்கள் உதவி செய்தனர். அது போதுமானதாக இல்லை. அதனால் புதிய பங்குதாரர்களைச் சேர்க்க மும்பை, கொல்கத்தா ஆகிய இடங்களுக்குச் சென்றார். "வ.உ.சி. வட இந்தியாவிற்கு கிளம்பும் போது "திரும்பினால் கப்பலுடன் திரும்புவேன், இல்லையெனில் கடலில் விழுந்து மாண்டு போவேன்", என்று சூளுரைத்துச் சென்றார். வ.உ.சி. "எஸ்.எஸ். காலியோ" என்ற கப்பலுடன் திரும்பினார். இந்நிகழ்வு ஆங்கிலேயர் கண்களில்நெருப்பை அள்ளி கொட்டியதுபோல் இருந்தது."

இந்திய கப்பலைக் கண்டு பொதுமக்கள் பெருமகிழ்ச்சி அடைந்தனர். இந்த கப்பலில் 42 முதல் வகுப்பு இருக்கைகள், 24 இரண்டாம் வகுப்பு இருக்கைகள் மற்றும் 1300 சாதாரண இருக்கைகள் இவற்றைக் கொண்டிருந்தது.




மேலும் 4000 சாக்கு மூட்டைகளை ஏற்றிச் செல்ல இயலும். எஸ் வேதமூர்த்தி பிரான்ஸ் தேசம் சென்று "எஸ்.எஸ்.லாவோ" என்ற கப்பலை வாங்கி வந்தார். நீராவி இயந்திரம் பொருத்தப்பட்ட இரு படகுகளும் வாங்கினர். இந்திய செய்தித் தாள்கள் அனைத்தும் இது குறித்து கட்டுரைகள் வெளியிட்டு வ.உ.சி.- ஐ கௌரவித்தது.

## பொறுக்காத ஆங்கிலேயர்கள்:

கப்பல் நிறுவனம் மெதுவாக வளர்ந்தது. வணிகர்கள் தங்கள் சரக்குகளை சுதேசிக் கப்பலிலேயே அனுப்பினர். பிரிட்டிஷ் கப்பல் நிறுவனம் இந்தப் போட்டியைச் சமாளிக்க முடியாமல் கட்டணத்தைக் குறைக்க முடிவு செய்தது. கடைசியில் இலவசமாக அழைத்துச் செல்வதாகக் கூறியது. ஆனால் இந்தியர்கள் இலவசப் பயணத்தை மறுத்துவிட்டனர். உடனே வ.உ.சி.க்கு கையூட்டு கொடுக்க முயற்சி செய்தனர். சுதேசி கப்பல் நிறுவனத்தை விட்டு விலகினால் ரூ.1,00,000 கொடுப்பதாகக் கூறினர். வ.உ.சி. மறுத்துவிட்டார். இறுதியாக இந்திய கப்பல் ஆங்கிலேயர்களின் கப்பலுடன் மோத வந்தது என்று நீதிமன்றத்தில் குற்றம் சாட்டப்பட்டது. வ.உ.சி. அது பொய்க் குற்றச்சாட்டு என்று நிரூபித்து இந்திய கப்பல் செல்ல அனுமதி பெற்றார்.

## தூத்துக்குடி நூற்பாலை வேலை நிறுத்தம்:

தூத்துக்குடியில் கோரல் நூற்பாலையில் நாள் முழுவதும் இடைவேளை இல்லாமல் பன்னிரண்டு மணி நேரத்திற்கு அதிகமாக கடினமாக உழைக்கும்தொழிலாளர்களின் அவல நிலையைப் பார்த்து வ.உ.சி. மிகவும் வருந்தினார். நூற்பாலை தொழிலாளர்களை வேலை நிறுத்தம் செய்யும்படி தூண்டினார்.

வ.உ.சி.யும் சுப்ரமணிய சிவாவும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு அளித்தனர். 1908ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாள் நூற்பாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். கூலி உயர்வு, வாரத்தில் ஒரு நாள் விடுமுறை, மற்ற விடுமுறை நாட்கள் என்பதே இவர்களின் கோரிக்கையாகும்.

முதலில் நூற்பாலை நிர்வாகம், தொழிலாளர்கள் நம்பிக்கை இழந்து விரைவில் வேலைக்குத் திரும்பிவிடுவார்கள் என்று நினைத்தது. ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்தது. இறுதியில் நூற்பாலை நிர்வாகம் அவர்கள் கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டது. 9 நாள் வேலை நிறுத்தத்திற்குப் பிறகு



மனைவியுடன் வ.உ.சி

தொழிலாளர்கள் வேலைக்குத் திரும்பினர். வேலை நிறுத்தம் பெரும் வெற்றி பெற்றது. அது தொழிற்சங்கங்கள் இல்லாத ஒரு காலம். இந்தியாவில் முதல் தொழிற்சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு 1920.

### மக்கள் செல்வாக்கில் வ.உ.சி:

வ.உ.சி. வெளி நாட்டுப் பொருட்களைப் புறக்கணித்தார். மக்களும் புறக்கணித்தார்கள். அந்த காலகட்டத்தில் வின்ச் தான் மாவட்ட ஆட்சியர். ஆனால் மக்கள் வ.உ.சி. யின் சொற்களைக் கட்டளையாக ஏற்றனர். வ.உ.சி. சொல்லும் எதையும் செய்ய மக்கள் தயாராக இருந்தார்கள். **"வ.உ.சி.காலத்திற்கு முன்பு படித்தவர்கள் மட்டுமே சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொண்டனர். ஆனால் தொழிலாளர்கள், உழைப்பாளிகள் என அனைவரையும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடச் செய்த பெருமை வ.உ.சி.க்கே உரியது."**

### உற்ற நண்பர் சுப்பிரமணிய சிவா:

சுப்பிரமணிய சிவா, மதுரைக்கு அருகில் உள்ள வத்தலகுண்டு என்ற ஊரைச் சேர்ந்தவர். அவர் அந்த கிராமத் தலைவரின் மகன். அவர் ஆங்கிலத்திலும், தமிழிலும் மிக்க புலமை வாய்ந்தவர். அவர் கிராமம் கிராமமாகச் சென்று மக்களிடையே தாய் நாட்டின் சுதந்திரம் குறித்துப் பேசுவார். அவர் 1907ஆண்டு தூத்துக்குடிக்கு வந்து சொற்பொழிவாற்றினார். வ.உ.சி.கடற்கரையில் நடந்த அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவரது பேச்சாற்றலும் தாய் நாட்டுப் பற்றும் வ.உ.சி.யை மிகவும் கவர்ந்தது. அவர்கள் நெருங்கிய நண்பர்கள் ஆகிவிட்டனர்.

### வ.உ.சி. கைது:

சுதேசி கப்பல் நிறுவனத்தின் வளர்ச்சி ஆங்கிலயர்களை எரிச்சலூட்டியது. நூற்பாலை வேலை நிறுத்தத்தின் வெற்றி அவர்களை அச்சுறுத்தியது. இந்தியாவில் நிலைத்திருக்க வேண்டுமென்றால் வ.உ.சி.யைக் கைது செய்வது அவசியம் என்று உணர்ந்தார்கள். அவர்கள் அதற்கான சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தனர். வங்கத்தின் சுதந்திரப் போராட்டத் தலைவரான பிபின் சந்திர பால் 1908ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் விடுதலையாக இருந்தார். அதனை வ.உ.சி. அதை ஒரு விழாவாக கொண்டாட எண்ணினார். அந்த விழா நடந்தால் வ.உ.சி. மக்களிடையே பேசுவார். அதை ஆங்கில அரசு விரும்பவில்லை. அதனால் வ.உ.சி.யைக் கைது செய்ய முடிவு செய்தனர்.

ஆனால் அவரைத் தூத்துக்குடியில் கைது செய்தால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்படும். அதனால் வ.உ.சி.யைத் திருநெல்வேலி வந்து தன்னைச் சந்திக்கும்படி மாவட்ட ஆட்சியர் ஒரு ஆணை அனுப்பினார். வ.உ.சி. அந்த ஆணையை ஏற்றுத் திருநெல்வேலி செல்லத் தயாரானார். அவர் கைது செய்யப்படுவார் என்று அனைவருக்கும் தெரிந்தும், திருநெல்வேலிக்கு அவரது ஆப்த நண்பர் சுப்ரமண்ய சிவாவுடன் சென்றார். இருவரும் மாவட்ட ஆட்சியரைச் சந்திக்க சென்றபோது இருவரையும் திருநெல்வேலியைவிட்டு வெளியேறிவிட வேண்டும் என்றும் பொதுக்கூட்டங்களில் பேசக்கூடாது என்றும் கூறினார். வ.உ.சி. அவரது நிபந்தனைகளை ஏற்க மறுத்துவிட்டார். அதனால் வ.உ.சி.யும் சிவாவும் 1908ஆம் ஆண்டு மார்ச் 12ஆம் நாள் கைது செய்யப்பட்டனர்.

### திருநெல்வேலி எழுச்சி:

வ.உ.சி. கைது செய்யப்பட்டதை அறிந்தவுடன் மக்கள் கொந்தளித்தனர். திருநெல்வேலியில் கடைகள் அடைக்கப்பட்டன. போக்குவரத்து நிறுத்தப்பட்டது. பள்ளிகளும் கல்லூரிகளும் சேதப்படுத்தப்பட்டன. மண்ணெண்ணெய்க் கிடங்கு தீ வைக்கப்பட்டது. இரண்டு நாட்கள் இந்த நிலை நீடித்தது. அஞ்சல் நிலையமும் தீ வைக்கப்பட்டது. காவல் நிலையமும், நகராட்சி அலுவலகமும் தாக்கப்பட்டது. தூத்துக்குடியில் பதட்டம் நீடித்தது. கடைகள் மூடப்பட்டன. கோரல் நூற்பாலை மற்றும் "பெஸ்ட் அண்ட் கம்பெனி" தொழிலாளர்கள் வேலை நிறுத்தில் ஈடுபட்டனர். இதுவே இந்தியாவில் முதல் அரசியல் வேலை நிறுத்தம். 1908ஆம் ஆண்டு மார்ச் 14ஆம் நாள் முதல் மார்ச் 19ஆம் நாள் வரை

நெல்லையில் உள்ள வ.உ.சி.மணி மண்டபம்



நடைபெற்றது. பொதுமக்களும் அதில் கலந்து கொண்டனர். பொதுக் கூட்டங்களும் ஊர்வலங்களும் நடைபெற்றன. காவல்துறையினர் துப்பாக்கிச் சூட்டில் 4 பேர் பலியானார்கள். இந்த நிகழ்வை திருநெல்வேலி எழுச்சி என்று கூறுகிறார்கள்.

### சிறைத் தண்டனை:

காவல் துறையினர் வ.உ.சி.க்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்ததில் நீதிபதி பின்ஹே தீர்ப்பு வழங்கினார். அந்த தீர்ப்பில் ஆங்கில அரசுக்கு எதிராக சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபடும்படி மக்களைத் தூண்டிவிட்டதற்காக 20 ஆண்டு தீவாந்திரத் தண்டனை. சிவாவுக்கு ஆதரவு அளித்ததற்காக மற்றுமொரு 20 ஆண்டு தீவாந்திரத் தண்டனை என 40 ஆண்டுகள் சிறை தண்டனை என்றும், சிவாவுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனை என தீர்ப்பு வழங்கினார்.

### தண்டனைக்கு எதிர்ப்பு:

யாருக்கும் கொடுக்கப்படாத கொடுமையான தண்டனை. ஆங்கில அரசுக்கு வ.உ.சி.யிடத்தில் அளவு கடந்த பயம். இந்தக் கொடுமையான தண்டனைக்கு அந்த பயமே காரணம். அவரைச் சிறையில் அடைத்தால்தான் அவர்களால் தொடர்ந்து இந்தியாவில் ஆட்சி செய்ய முடியும். வ.உ.சி.க்கு அப்பொழுது 36 வயது தான்.

"இந்தக் கொடிய தீர்ப்பைக் கேட்டு இந்திய மக்கள் அனைவரும் அதிர்ச்சி அடைந்தனர். வங்காளி, "அமிர்த பஜார்", "சுதேசமித்திரன்" "இந்தியா", "ஸ்வராஜ்யா" மற்றும் பல செய்தித்தாள்கள் இத்தீர்ப்பைக் கண்டித்தன. ஆங்கில இதழான "ஸ்டேட்ஸ் மேன்" இத்தீர்ப்பு நியாயமற்றது என்றும் வ.உ.சி.யின் தியாகம் போற்றத்தக்கது என்றும் குறிப்பிட்டது."

இந்தியாவுக்கான ஆங்கில அமைச்சர் லார்டு மார்லி, இக்குரூரமான தண்டனையை ஏற்றுக் கொள்ள இயலாது என லார்டு மன்றோவுக்கு எழுதினார். அந்தத் தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. மேல் முறையீடு செய்ததில் 10 ஆண்டு தீவாந்திரத் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அந்தமான் அனுப்ப இயலாது என்பதால் கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார் . அவரது நண்பர்கள் லண்டனில் உள்ள மன்னர் அவையில் (பிரிவியூ கௌன்சிலில்) முறையீடு செய்ததில் 6 ஆண்டு கடுங்காவல் தண்டனையாகக் குறைந்தது.

### சிறையடைப்பு:

வ.உ.சி. முதலில் கோயம்புத்தூர் சிறையிலும் பின்னர் கண்ணனூர் சிறையிலும் அடைக்கப்பட்டார். அக்காலத்தில் அவர்கள் மற்ற ஆயுள் தண்டனை பெற்ற கைதிகளைப் போலவே நடத்தப்பட்டனர். கடுமையான வேலைகள் செய்ய வேண்டும். வ.உ.சி. செல்வந்தர். நல்ல ஆரோக்கியமான சுவையான உணவு உண்ணும் வழக்கம் உடையவர். ஆனால் சிறையில் கல்லும் மண்ணும் இருக்கும் கூழைக் குடிக்க வேண்டியிருந்தது. சிறை ஆடைகள் முரடானவை. தலையை மொட்டையடித்து கை, கால்களில் விலங்கிட்டிருப்பர்.

### செக்கிழுத்த செம்மல்:

சிறையில் வ.உ.சி. கடுமையான வேலைகளைச் செய்தார். சணல் நூற்றார். அப்பொழுது அவரது உள்ளங்கைகளில் இருந்து ரத்தம் கசிந்தது. கல் உடைத்தார். மாடுகள் இழுக்கும் செக்கினை இழுத்தார். அந்தப் புகழ் பெற்ற வழக்கறிஞர் ஒரு மாடு போல உழைத்தார். அவரது எடை மிகவும் குறைந்தது. மருத்துவர் சிறையதிகாரியை எச்சரித்தார். உடனே அரிசி உணவு வழங்கப்பட்டது. பின்னர் சென்னை உயர் நீதிமன்றம் அவர் சொந்த உணவை உண்ணலாம் என்று கூறியது. வ. உ. சி.



இழுத்த செக்கு சென்னை காந்தி மண்டபத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது. இறுதியாக வ.உ.சி. கேரளாவில் உள்ள கண்ணனூர் சிறைக்கு மாற்றப்பட்டார்.

### சுதேசி கப்பல் விற்பனை:

வ.உ.சி. சிறையிலிருந்த போது சுதேசி கப்பல் நிறுவனம் மூழ்கிப் போனது. அவரில்லாமல் மற்றவர்களால் நிறுவனத்தை நடத்த இயலவில்லை. அவர்கள் கப்பலை விற்றுவிட்டனர். அதுவும் "எஸ்.எஸ்.காலியோ" என்ற கப்பலை ஆங்கில கப்பல் நிறுவனத்திற்கே விற்றுவிட்டார்கள். அது வ.உ.சி.யை மிகவும் பாதித்தது. அந்தக் கப்பலை வாங்க வ.உ.சி.என்ன பாடுபட்டார் ?

### சிறையிலிருந்து விடுதலை:

1912ஆம் ஆண்டு டிசம்பர் 24ஆம் நாள் வ.உ.சி. விடுதலை அடைந்தார். அப்பொழுது அரசியல் சூழ் நிலை முற்றிலும் மாறி இருந்தது. சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம் போன்றவற்றை அவரால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. விடுதலைக்குப் பின்னர் சென்னை, கோயம்பத்தூர், கோவில்பட்டி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் வசித்தார். முதலாவதாக சென்னைக்குச் சென்றார்.


இளம் வயதில் வ.உ.சி

"அவர் ஒரு மண்ணெண்ணெய்க் கடையொன்றை ஆரம்பித்தார். ஆனால் ஒரு வணிகராக அவரால் வெற்றி பெற இயலவில்லை. வ.உ.சி. சென்னையில் தொழிற்சங்கங்கள் தொடங்கி அதற்காகத் தீவிரமாகப் பணியாற்றினார். வ.உ.சி.யின் பெரும்பான்மையான தமிழ் நூல்கள் அவர் சென்னையில் வசிக்கும் போதே வெளியாகின. வ.உ.சி. சிறை சென்றதால் வழக்கறிஞர் பணி செய்வதற்கான உரிமையை இழந்தார்." அவரால் வழக்கறிஞராகப் பணியாற்ற இயலவில்லை. திலகர் மாதம் ரூ.50 அனுப்பி வைத்தார்.

### கோவையில் வ.உ.சி:

சென்னைக்குப் பிறகு கோயம்புத்தூரில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்றார். அங்கே ஒரு வங்கி இயக்குனராகவும் பணியாற்றினார். இந்த வருமானம் அவருக்கு போதுமானதாக இல்லை. வ.உ.சி. தான் சிறையில் இருந்தாலும் அரசியல் கைதியாக மட்டுமே இருந்தமையால் வழக்கறிஞராகப் பணியாற்ற அனுமதிக்கும்படி அரசாங்கத்திடம் விண்ணப்பித்தார். ஈ.எச். வாலஸ் 1908ஆம் ஆண்டு திருநெல்வேலியில் பணியாற்றியிருந்ததால் அவர் வ.உ.சி.யின் நேர்மையும் திறமையும் அறிந்திருந்தார். அதனால் அவர் அனுமதி அளித்தார். அவரது அச்செயலுக்கு நன்றி தெரிவிப்பதற்காக அவர் தனது கடைசி மகனுக்கு "வாலேஸ்வரன்" என்று பெயரிட்டார்.

### கோவில்பட்டியில் வ.உ.சி:

கோவில்பட்டியில் வழக்கறிஞராகப் பணியாற்றினார். அங்கேயும் அவர் வசதியற்றவர்களுக்கும் சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் இலவசமாக வாதாடினார். 1927ஆம் ஆண்டு அவர் காங்கிரஸ் கட்சியில் மீண்டும் இணைந்தார். சேலத்தில் நடந்த மூன்றாவது கட்சி மாநாட்டில் கலந்து கொண்டு தலைமை உரையாற்றினார்.

கட்சி செயல்பாடுகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதால் தான் மிகவும் மகிழ்ச்சி அடைவதாகக் கூறினார். ஆனால் சேலம் மாநாட்டிற்குப் பிறகு மீண்டும் ஒதுங்கியே இருந்தார். அவர் கட்சியில் இருந்து விலகி இருந்தாலும் அவர் கடைசி வரை திலகரின் சீடராகவே இருந்தார். கடைசி மூச்சு வரை ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து வந்தார்.

### தூத்துக்குடியில் மறைந்தார்:

1932ல் தூத்துக்குடி வந்தார். தமிழ் நூல்களை எழுதுவதிலேயே பெரும்பாலான நேரத்தைக் கழித்து வந்தார். தமிழ் இலக்கியங்கள் குறித்து நண்பர்களுடன் விவாதிப்பதை வழக்கமாக் கொண்டிருந்தார். வ.உ.சி. சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்பினார். ஆனால் "என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' என்ற பாரதியாரின் பாடலைக் கேட்ட வண்ணமே "வாராது வந்த மாமணியாம்' சிதம்பரனார் 1936ஆம் ஆண்டு நவம்பர் 18ஆம் தேதி இரவு உயிர் நீத்தார். இரண்டாம் உலகப் போர் மூண்டால் இந்தியா சுதந்திரம் பெறுவது உறுதி என்று அவர் கூறியிருந்தார். அதே போல் இந்தியா இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15ஆம் நாள் சுதந்திரம் பெற்றது. ●

@sudhesinews

சுதேசி செய்திகள்

சுதேசி செய்திகள்

Subscribe my YouTubechannel